**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.124/2016** **Date:15.02.2024**
**(D.W– 1)**

திரு.லோகநாதன் த/பெ.சுப்பிரமணி
**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து பெருமாநல்லூர் கிராமத்தில் நத்தம் பொறம் போக்கில் உள்ளது என்றால், சரியல்ல. நத்தத்தில் உள்ளது. வாதிக்கு பாத்தியப்பட்ட மீதி உள்ள கட்டிடத்திற்கு வடக்கும், கோவை–ஈரோடு மெயின் ரோட்டிற்கு தெற்கும், திருப்பூர் குன்னத்தூர் ரோட்டிற்கும் கிழக்கும், தென்வடல் சந்து தடத்திற்கு மேற்கும் தாவா B அட்டவணை சொத்து உள்ளது என்றால், சரிதான். ஆனால் அந்த சொத்து என்னுடைய சொத்தாகும். வாதியின் அப்பா துரைசாமி 26.06.1992 ல் தாவா B சொத்தை கிரையம் பெற்றார் என்பது எனக்கு தெரியுமா என்றால், சரியல்ல. வாதிக்கு கிரையம் கொடுத்த முத்துசாமி கவுண்டர் பரம்பரை மணியக்காரர் குடும்பம் என்றால், சரிதான். நான் உரிமை கோரும் சொத்திற்க்கு எல்லா ஆவணத்தையும் நீதிமன்றதில் கொடுத்துள்ளேனா என்றால், கொடுத்துள்ளேன். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.274/பி1 ஏ 1 ஏ 1 என்றால், அந்த சொத்து என்னுடையது ஆகும். புதிய காலை எண். என்ன என்றால், 353/2 ஆகும். அது எங்களுடைய சொத்தாகும்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.